DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.No.118/2025
Prosecution Witness P.W.8

Name : **திரு.விக்னேஷ்குமார்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

3–ம் எதிரி ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**நாள்: 23.02.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் உசிலம்பட்டி நீதிமன்றத்தில் வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். இறந்து போன முத்துக்குமரன் எனக்கு தம்பி முறை என்பதால் எனக்கு அவரை நன்கு தெரியும். அவர் மாடு ஏற்றும் தொழிலும், பைனான்ஸ் தொழிலும் செய்து வந்தார் லாரியில் கேரளாவிற்கு அடி மாடுகளை ஏற்றி அனுப்புவது அவரது தொழில். லாரி சொந்தமாக வைத்திருந்தார், இந்த வழக்கு சம்பந்தமாக நீதித்துறை நடுவர் முன்னிலையில் என்னை விசாரணை செய்து எனது வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்கள். என்னிடம் காண்பிக்க கூடிய வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய அந்த வாக்கு மூலத்தின் கையெழுத்து தான், அது அ.சா.ஆ.6.

2. இறந்து போன முத்து தான் எனக்கு இந்த வழக்கின் முதல் எதிரியான சதாம் உசேன் என்பவரை 2023 ஆம் ஆண்டு மதுக்கரையில் அவரது லாரி மாடு ஏற்றிக்கொண்டு செல்லும் போது கோசாலையில் மாடுகளை பிடித்துக் கொண்டார்கள் என்றும் வண்டியை நீதிமன்றத்தில் இருந்து எடுத்துக் கொடுப்பதற்காக முத்து மூலமாக சதாம் உசேன் என்னை 2023 ஆம் ஆண்டு

அணுகினார். அந்த வகையில் எனக்கு முதல் எதிரி பரிட்சயம். நான் மதுக்கரை நீதிமன்றத்தில் நான் மனு தாக்கல் செய்து சதாம் உசேன் லாரியை நான் எடுத்து சதாம் உசேனிடம் கொடுத்து விட்டேன். அதற்கான செலவுகளை முத்துக்குமரன் தான் பார்த்துக் கொண்டார்.

3. அதன் பிறகு சதாம் உசேன் முத்துக்குமரனிடம் நிறைய வரவு செலவுகள் வைத்திருந்த காரணத்தினால் சதாம் உசேன் இரண்டாவது மனைவியான 2–ம் எதிரி பிருந்தா தனது வீட்டின் அசல் ஆவணத்தை கொடுத்து முத்துக்குமாரிடம் கொஞ்சம் பணம் வாங்கி இருப்பதாக சொல்லி ரூ.41 லட்சம் பணம் வாங்கிக் கொண்டு முத்துக்குமாரின் பணம் ரூ.35 லட்சம், நாகபாலனின் பணம் ரூ.6 லட்சம் ஆக மொத்தம் ரூ.41 லட்சம் கொடுத்திருந்தார்.

4. அதற்கு பிருந்தாதேவி என்பவர் வீட்டு பத்திரமும், காசோலையும் கொடுத்திருந்தார். அந்த காசோலையை முத்துக்குமரன் வங்கியில் பணமாக்க செலுத்தி அந்த காசோலை திரும்பியதால் அது தொடர்பாக நான் பிருந்தாவிற்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அது சம்பந்தமாக பிருந்தாவிடம் பேசுவதற்காக ஜெயலஷ்மி என்ற பத்திர எழுத்தர் என்னை அணுகினார். கடந்த 15.11.2024 ஆம் ஆண்டு கார்த்தி என்பவர் விசேஷத்திற்கு நான் வருவதாகவும் அன்றைய தினம் ஜெயலட்சுமியிடம் பேசலாம் என நான் அவரிடம் தெரிவித்தேன்.

5. 15.11.2024 ஆம் தேதியன்று மாலை 3.00 – 4.00 மணி அளவில் நான் முத்துக்குமரன், புகார்தாரர் நாகபாலான், பிருந்தாதேவி, ஜெயலட்சுமி, 10 தூரத்தில் சதாம் உசேன் ஆகியோர் கார்த்திக் என்பவரது மெக்கானிக் ஷாப்பில் உட்கார்ந்து இது சம்பந்தமாக நாங்கள் பேசினோம். அப்பொழுது பிருந்தாதேவி என்பவர் வீட்டின் அசல் ஆவணம் முத்துக்குமரன் திருப்பி கொடுத்தால் ரூ.25 லட்சம் அவர் தருவதாக சொன்னார் அதற்கு ஜெயலட்சுமி ஏற்பாடுகள் செய்து வைத்திருப்பதாக தெரிவித்தார்.

6. அந்த ரூ.25 லட்சம் என்பது எங்களுக்கிடையே பேச்சுவார்த்தையில் முடியவில்லை. வேறு ஒரு நாள் பேசிக் கொள்ளலாம் என சொல்லிவிட்டுநான் கிளம்பி விட்டேன். அன்றைய தினம் சதாம் உசேன் எதுவும் பஞ்சாயத்தில் பேசவில்லை, பிருந்தாதேவி மட்டும் தான் பேசினார் பணம் ரூ. 25 லட்சம் கொடுத்தால் பேசிக் கொள்ளலாம் இல்லை என்றால் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளலாம் என முத்துக்குமரன் சொன்னார். மறுநாள் முத்துக்குமரனிடம் சதாம் உசேன் போன் செய்து பணம் வாங்கி கொள்ளுங்கள் என்றும், இல்லையென்றால் நடப்பதே வேறு என்று முத்துக்குமரனிடம் மிரட்டி உள்ளார்.

7. இது சம்பந்தமாக முத்துக்குமரன் எனக்கு தகவல் சொன்னார். அடுத்த நாள் அவர் இரவிற்கு மேல் இறந்து விட்டதாக அவரது அண்ணன் சொல்லி நான் தெரிந்து கொண்டேன். இந்த சம்பவத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு சதாம் உசேன் முத்துக்குமரன் கொடுத்திருந்த பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக சதாம் உசேன் முத்துக்குமரன் வீட்டிற்கு சென்று பிரச்சனை செய்துள்ளார். அப்போது சதாம் உசேன் முத்துக்குமரனை கொன்று விடுவேன் என்றும், லாரியில் கஞ்சா வைத்து உன் மீது போலீஸ் வழக்கு கொடுத்து விடுவேன் என்றும் மிரட்டி உள்ளார்.

8. இது சம்பந்தமாக கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டது அந்த புகாரின் மீண்டும் எந்த பிரச்சினையும் செய்ய மாட்டோம் எனச் சொல்லி சதாம் உசேன் எழுதிக் கொடுத்துள்ளார். அப்போதிலிருந்து சதாம் உசேன் முத்துக்குமரனை மிரட்டி வந்துள்ளார். 2024 ம் ஆண்டு அக்டோபர் மாதம் பிருந்தாவுக்கு எதிராக நான் காசோலை வழக்கு தொடுத்து இருந்தேன். நீதித்துறை நடுவர் உத்தமபாளையத்தில் அந்த வழக்கை முத்துக்குமரனுக்காக நான் ஆன்லைனில் தாக்கல் செய்திருந்தேன். அது மூன்று முறை திருப்பப்பட்ட காரணத்தினால் அந்த வழக்கு என்னால் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு எடுத்துச் செல்ல இயலவில்லை.

9. பிருந்தாவின் வீட்டின் அசல் ஆவணம் தாய்பத்திரம், கிரைய பத்திரம், பட்டா முத்துக்குமரன் வசம் இருந்தது ஆன்லைனில் ஸ்கேனிங் ஆகவில்லை என்பதற்காகத்தான் அந்த புகாரானது மூன்று முறை திருப்பப்பட்டது. குறிப்பிட்ட நாளில் அந்த புகார் தாக்கல் செய்வதற்கு முன்பே முத்துக்குமரன் கொலை செய்யப்பட்டுள்ளார்.

10. 2-ம் எதிரி பிருந்தா சதாம் உசேனின் 2வது மனைவி. இருவரும் சேர்ந்துதான் அந்த கடனை முத்துக்குமரனிடம் வாங்கி இருந்தார்கள். மொத்தம் 41 லட்சம் ரூபாய் கடன் திருப்பி கொடுக்க வேண்டும். அதற்காகத்தான் பிருந்தா காசோலையும், வீட்டு அசல் ஆவணமும் கொடுத்திருந்தார். போலீசார் இந்த வழக்கு தொடர்பாக என்னை விசாரணை செய்தார்கள்

**<u>எதிரிகள் 1 முதல் 3 தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் கைமாற்றாக கடன் கொடுக்கப்பட்டது என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றும், அசல் ஆவணத்தின் அடிப்படையில் கடன் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். அந்த ஆவணத்தை நான் FTC நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் நான் ஆன்லைன் மூலமாக தாக்கல் செய்தேன். ஸ்கேன் ஆகவில்லை, நான் அனுப்பிய அறிவிப்புதான் என்னிடம் காண்பிக்க கூடியது என்றால் சரிதான்.

2. அதில் பிருந்தாவின் வீட்டு ஆவணம் கொடுத்ததாக எந்த ஒரு வாசகமும் இல்லை என்றால் சரிதான்.போலீசார் என்னை விசாரணை செய்யும்போது லாரியை திரும்பி எடுப்பதற்கு எவ்வளவு ரூபாய் பணம் செலவானது என்று விபரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் லாரி கைப்பற்றப்பட்டது என்ற விபரமும் நான் போலீசார் விசாரணை சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் நிலையம் சென்ற விபரமும், வண்டி எடுத்துக் கொடுத்த விபரத்தையும் சொல்லி உள்ளேன்.

3. அதற்கு எவ்வளவு அபராதம் போடப்பட்டது அது சம்பந்தமான ரசீது எதுவும் போலீசார் விசாரணையில் ஒப்படைத்தேனா என்றால் நீதிமன்றத்தில் அந்த வழக்கு முடியவில்லை, நிலுவையில் உள்ளது, எனவே அபராதம் எதுவும் போடவில்லை ஜாமின்தாரர் கொடுத்து அந்த லாரியை இடைக்கால மனுவின் பேரில் எடுத்து வந்தோம். அந்த உத்தரவு நகலையும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை போலீசார் விசாரணையில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

4. முத்துக்குமரன் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். கம்பத்தில் அதே போல அவர் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். இரண்டாம் எதிரி ரூ.35 லட்சம் கடன் வாங்கி இருந்தார் என்று மட்டும் தான் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மொத்தம் ரூ.41 லட்சம் என்றும், நாகபாலனுக்கு ரூ.6 லட்சம் பணம் கொடுக்க வேண்டும் என்றும், சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. முத்துக்குமரனிடம் வாங்கிய பணத்தை மட்டும் அதில் சொல்லியுள்ளேன். முத்துக்குமரனுக்கு அந்த பணம் எப்படி கிடைத்தது என்ற விவரம் எனக்கு தெரியாதென்றால் அவர் கையில் வைத்திருந்த பணமும், நகைகளை அடமானம் வைத்து வந்த பணம்தான் அவர் கொடுத்தார். 2ம் எதிரி நேரடியாக பணம் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது என்றால், வாங்கிய விபரத்தை முத்துக்குமரன் என்னிடம் தெரிவித்துள்ளார்.

6. போலீசார் விசாரணையில் எதிரிகள் ஒன்று மற்றும் இரண்டு சேர்ந்து ரூ.41 லட்சம் பணம் தர வேண்டும் என நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். முத்துக்குமரனுக்கு ரூ.35 லட்சமும் நாகபாலனுக்கு ரூ.6 லட்சம் தர வேண்டும் அவ்வாறு எந்த விபரமும் போலீஸ் விசாரணை சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கு வைத்து மிரட்டப்பட்டார் என்ற விவரமும் எத்தனை முறை அவ்வாறு மிரட்டப்பட்டது என்ற விவரமோ புகார் கொடுத்த விபரமோ

எனக்கு நேரடியாக தெரியாது என்றால் முத்துக்குமரன் வீட்டில் வைத்து மிரட்டப்பட்டதாக தான் புகார் தரப்பட்டது.

7. நான் கூறுவதுபோல் வழக்கறிஞர்கள் யாரும் சமாதானம் பேச மாட்டார்கள் என்றும் காவல் நிலையத்தில் தான் புகார் தெரிவிப்பார் என்றால் சரியல்ல. உறவினர் என்ற வகையில் நான் அழைத்து சமாதானம் பேசினேன். நான் கூறுவது போல் சமாதானம் எதுவும் பேசவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் சம்பந்தமாக ஒரு நபர் என்னிடம் போனில் பேசியது தொடர்பாக எனக்கு விவரம் தெரியாது என்றால் நாகபாலன் எனக்கு தகவல் சொல்லி முத்துக்குமரன் இறந்த செய்தி எனக்கு தெரியும்.

8. எத்தனை மணிக்கு முத்துக்குமரன் இறந்தார் என்று என்னிடம் சொன்னாரா என்று எனக்கு தெரியாது. அதிகாலை 1:45 மணிக்கு முத்துக்குமரன் இறந்து போனதாக எனக்கு நாகபாலன் சொன்னார் என்று நான் போலீஸ் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் தொலைபேசி வாயிலாக தகவல் வந்தது என்று சொல்லி உள்ளேன். 01.45 மணிக்கு இறந்துபோனதாக என்னிடம் நாகபாலன் போனில் சொன்னார் என நான் சொன்னால் அது தவறு. நேரம் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. எனக்கு இறந்து போன முத்துக்குமரன் பெண்களுக்கு வட்டிக்கு பணம் கொடுத்து அதே போல் லோன் ஏற்பாடு செய்து தருவார் என்ற விவரம் தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர் வார வட்டி மற்றும் மீட்டர் வட்டி கொடுத்து பல நபர்களிடம் பிரச்சினைகள் ஈடுபட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் எந்த வண்டியையும் காப்பற்றவில்லை என்றும், எந்த இடத்திற்கும் பஞ்சாயத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. 2–வது எதிரியும் 1 வது எதிரியும் தொடர்பில் இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, எனக்கு நேரடியாக தெரியும். பிருந்தாவே என்னிடம் சொல்லியுள்ளார். அவர்கள் நேரடியாக அவர்கள் எந்த வீட்டில் குடியிருந்து வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால்

தெரியாது. நான் முத்துக்குமரனுக்காக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரி அப்படி சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்க கூடிய ஆவணம் தான் நான் வழக்கறிஞர் அறிவிப்பு முத்துக்குமரனுக்காக 2–ம் எதிரி பிருந்தாவுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். அந்த ஆவணம் எ.த.சா.ஆ.1. முத்துக்குமரன் பிருந்தாவின் பெயரை ஆவணத்தில் போலியாக மாற்றி அது தொடர்பாக லோன் வாங்குவது தொடர்பாக தான் பிரச்சினை ஏற்பட்டு பிருந்தாவிற்கும் முத்துக்குமரனுக்கும் பிரச்சனை வந்தது என்றால் சரியல்ல. 5 லட்சம் ரூபாய் கமிஷன் கேட்டு தான் பிருந்தாவிடம் முத்துக்குமரன் பிரச்சனை செய்துள்ளார் என்றால் சரியல்ல. இதேபோல் பல நபர்களிடம் கமிஷன் கேட்டு முத்து குமரன் பிரச்சனை செய்த நபர் என்றால் சரியல்ல.

<u>4–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை</u>

<u>மறுவிசாரணை - இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.23 19:26:13 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.